# பரமசத்குரு சிங்ஹாய் அவர்களின் சுருக்கமான

பரமசத்குரு சிங்ஹாய் அவர்கள் ஆலெக் (வியட்நாம்) நாட்டில், வாழ்ச்கை வரலாறு செல்வந்த குடும்பத்தில், மிகவும் புகழ்பெற்ற இயற்கை வைத்திய நிபுணராக விளங்கி யவரின் மகளாகப் பிறந்தார். அவர் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவராக வளர்க்கப்பட்டார். அதே சமயம் அவர் தனது பாட்டியிடமிருந்து புத்தமத கோட்பாடுகளின் அடிப்படையான உண்மைகளைத் தெரிந்து கொண்டார். சிறிய குழந்தையாக இருந்தபோதே அவர் தத்துவ ரீதியான விஷயங்களிலும். மதங்கள் சம்பந்தப்பட்ட போதனைகளிலும். ஒரு விசேஷமான ஆர்வத்தைக் காட்டி வந்தார். அது மாத்திரமல்ல அவர் உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளிலும் மிகுந்த கருணையுடன் மற்ற எவரிடமும் காண இயலாத அளவிற்கு ஜீவகாருணியமும் நிறைந்தவராக இருந்தார்.

18 வயது ஆகும்போது அவர் இங்கிலாந்து நாட்டிற்கு படிப்பதற்காகச் சென்றார். அதன்பிறகு அவர் பிரான்ஸ், ஜெர்மனி நாடுகளுக்குச் சென்றார். அவர் செஞ்சிலுவைச் சங்கத்தில் அன்புடன் தொண்டுகள் புரிந்தார். ஒரு ஜெர்மன் விஞ்ஞானியைத் திருமணம் புரிந்து கொண்டார். இரண்டு வருடகால இனிய திருமண அனுபவத்திற்குப் பிறகு அவரது அனுமதியுடன் அவர் திருமண நிலையிலிருந்து விலகி, ஞானத்தைற்தேடி வெளிக் கிளம்பினார். சிறுவயதிலிருந்தே அவரது உள் மனதில் இந்த பேரார்வம் இருந்தது.

அவர் இந்த நேரத்தில் பலவித தியான முறைகளை, பலவித சத்குருநாதர்களின், ஆசிரியர்கள் இவர்களது மேற்பார்வையில், அற்புத அனுபவங்களோடு, தனது எல்லைக்கு எட்டியவரை ஆழ்ந்து படித்து, பயின்று வந்தார். இது அவருக்கு ஒரு மனஉறுதியை ஏற்படுத்தியது.

அது என்னவென்றால், எந்த ஒரு மனிதரும் வாடி வதங்கும் மனித சமுதாயத்திற்கு தனித்திருந்து எந்தவிதமான உதவிகளும் செய்ய இயலாது. இந்த மனித சமுதாயத்திற்கு உண்மையான பேருதவிகளைச் செய்ய வேண்டும் என்றால், அது தான் பூரணத்துவம் பெற்றாலேயொழிய நடைபெறாது என்பதே. ஆக இந்த முக்கியமான குறிக்கோளை மனதில் வைத்து அவர் பற்பல நாடுகளுக்கு பயணம் செய்தார். ஞானத்தை சரிவர அடைந்திடும் சரியான பயிற்சி முறையைத் தேடி அலைந்தார். இப்படி பற்பல வருடங்கள், சரிபார்க்கும் முறைகள், ஆன்மீக நிலையில் பற்பல இடர்கள், இடர்பாடுகள், தொல்லைகள் இவையனைத்தையும் கடந்து சத்குரு நாதர் சிங்ஹாய் அவர்கள் குவான்-யின் தியான முறையையும் அந்த இறைபெரு நிலையையும், தெய்வீக ரச அனுபூதி நிலையையும் இமயமலைச் சாரலில் பெற்றார். அதன்பிறகு அவர் தீவிர தியானப் பயிற்சிகளில் முறையாக ஈடுபட்டு இமயமலையில் தனித்திரு - பசித்திரு - விழித்திரு என்ற பொன்வாக்குகளுக்கு இணங்க ஒரு குறிப்பிட்ட காலம் தனித்த தவப் பயிற்சிகளில் முன்னேற்றம் கண்டு உள் ஒளி ஜோதி வட்டத்தின் முழுநிலையில் ஒன்றுபட்டு இருப்பதில் வெற்றிகண்டவராக ஆனார். அவர் இவ்வாறு உள் வெளிச்சம் பெற்ற பிறகு பல வருடங்கள் ஒரு புத்தமதத் துறவியாக அமைதியான முறையில் எந்தவித சலனமும் இன்றி வாழ்ந்து வந்தார்.

அவர் இயற்கையாகவே மிகவும் கூச்சமுடையவர். அவர் தான் பெற்ற விலைமதிப்பற்ற அரும்பெரும் பொக்கிஷத்தை எவரும் அறியாதவாறு, மற்றவர்கள் அவரிடம் வந்து இந்த பெரும் செல்வத்தை, மன அமைதியை, தியான முறையை தங்களுக்கும் அளிக்குமாறு வற்புறுத்திக் கேட்கும்வரை வெளியிடாது வைத்திருந்தார். பிறகு அவர்களின் இடைவிடாத வற்புறுத்தலுக்கு செவிசாய்த்து தனது போதனைகளையும், தியான முறையையும், அவர்களுக்கு அளித்திட முன்வந்தார். இப்படிப்பட்ட அவரது சீடர்களின், அதுவும் பார்மோசாவிலும், அமெரிக்காவிலும் இருக்கும் முந்தைய இனிய சீடர்களின் இடைவிடாத வேண்டுகோள்களுக்கும், முயற்சிகளுக்கும்,

செவிசாய்த்து சத்குரு சிங்ஹாய் அவர்கள் உலகம் முழுவதிலும், சொற்பொழிவுகள் நிகழ்த்தி பல லட்சக்கணக்கான மக்களுக்கு உண்மையான ஆன்மீக நிலையில் பற்றுள்ள தியான நிலை அன்பர்களுக்கு, தீட்சை அளித்திருக்கிறார்.

இன்று பல்வேறு நாடுகளைச் சேர்ந்த எல்லா மதங்களைச் சேர்ந்தவர்கள் நமது சத்குருவிடம், அவரது உயரிய விவேகத்திற்காக அலைமோதுவது போல் வந்த வண்ணம் இருக்கிறார்கள். உண்மையாகவும், உள் அன்புடனும், இந்த உள் ஒளி மெய்ஞான கருவூலத்தின் உடனடி திறவுகோலான தியான முறையைக் கற்று பயிற்சி செய்ய விரும்பும் மெய் அன்பர்களுக்கு, அதுவும் தானே கற்று, பயின்று அனுபவித்த உயர்ந்த குவான்-யின் தியான முறையில் சத்குரு சிஹாய் அவர்கள் தீட்சை அளித்து அவர்களுக்குத் தேவையான உயர்ந்த ஆன்மீக அறிவுரைகளை வழங்குகின்றார்.